Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 92 / 2022

**DEPOSITION OF ACCUSED SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | தீர்த்தமலை | Calling: | விவசாயம் |
| Father's Name: | ஆறுமுகம் | Religion: | |
| Village: | மேல்பள்ளிபட்டு | Age: | 57 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.03.2026

எதிரி ஆஜர். புகார்தாரர் ஆஜர்.

எ.த.சா.1 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது மகன். சரவணன் என்பவர் மூலம் தான் நாகம்மாளை தெரியும். முதலில் நாகம்மாளிடம் நாங்கள் ரூ.50,000/–வாங்கினோம். பிறகு பணம் தேவைப்பட்டதால் ரூ.30,000/–ஐ வாங்கினோம். தேதி நினைவில்லை. பிறகு ரூ.40,000/– வாங்கினோம். மொத்தமாக ரூ.1,10,000/–ஐ வாங்கினோம். நான் தான் பணம் வாங்கினேன். என் மகனுக்கும் பணம் வாங்கியதற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை. என் மகன் நான் பணம் வாங்கும்போது பெங்களூரில் வேலை செய்து கொண்டிருந்தார். என் பெயரில் காசோலை எதுவும் இல்லை. நான் பணம் தான் கொடுத்து விடுவோமே என்று விஸ்வநாதனின் பெயரில் உள்ள காசோலையை எடுத்து கையெழுத்து போட்டு சரவணன் மூலமாக நாகம்மாளிடம் கொடுத்தேன். கொரோனா காலத்தில் ரூ.50,000/–ஐ செங்கல் ஓட்டி நாகம்மாளிடம் கொடுத்துவிட்டேன். பிறகு என் மகன் 2022ம் வருடம் ரூ.10,000/–ஐ நாகம்மாளிடம் கொடுத்துவிட்டு வந்தார். பிறகு பணத்தை கொடுத்துவிடுகிறோம் என கூறியும் வீட்டிடம் வந்து அசிங்கமாக பேசினார். நாங்கள் பணம் கொடுக்கிறோம் என்று

சொன்னோம். ஆனால், அதற்குள் அவர் வழக்கு தாக்கல் செய்துவிட்டார். இன்னும் புகார்தாரருக்கு ரூ.60,000/– நாங்கள் கொடுக்க வேண்டும்.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10வது படித்துள்ளேன். எனது வீட்டு முகவரி 1/44, மேல்பள்ளிப்பட்டு. நான், விஸ்வநாதன் ஆகியோர் அந்த வீட்டில் உள்ளோம் என்றால் சரிதான், சரவணன் என்பவர் தனியாக உள்ளார். விஸ்வநாதன் பெயரில் உள்ள காசோலை புக் நான் தான் வைத்துள்ளேனா என்றால் இல்லை, ஒரு காசோலை மட்டும் வைத்திருந்தேன். நான் ஜீன் 2021 லிருந்து ஜீன் 2022 வரை அதே வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். அதே வீட்டில் என்னுடன் விஸ்வநாதன் இருந்தார் என்றால் சரிதான். மே 2022ல் என் மகன் விஸ்வநாதனுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அது நாகம்மாள் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டது என எனக்கு தெரியும் என்றால் சரிதான். இன்றைய தேதிவரை அந்த அறிவிப்பிற்கு நானோ என் மகனோ பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியுள்ளேன். நாகம்மாள் தாக்கல் செய்த வழக்கு காசோலையை இன்று வரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். காசோலையை வங்கியில் செலுத்தி அது பணம் இல்லை என திருப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ரூ.1,10,000/–நான் நாகம்மாளுக்கு கொடுக்க வேண்டும் என வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் நாகம்மாளுக்கு என் பெயரில் அனுப்பினேனா என்றால் இல்லை. எந்தெந்த தேதியில் நாகம்மாளிடம் பணம் கடன் வாங்கினேன் என என்னால் குறிப்பிட்டு கூற முடியுமா என்றால் முடியும், முதல் முறை 01.03.2019ம் தேதி ரூ.50,000/– கடன் வாங்கினேன், இரண்டாம் முறை 12.03.2019ம் தேதி ரூ.60,000/– கடன் வாங்கினேன். மேற்படி ரூ.1,10,000/–ஐ தான் நான் திரும்ப கொடுக்கவேண்டும் என தற்போதும் கூறுகிறேன் என்றால் சரிதான். எதிரி விஸ்வநாதன் என்ன படித்துள்ளார் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு படித்துள்ளார்.

இன்னொருவர் பெயரிலுள்ள காசோலையை நான் இன்னொரு நபருக்கு கொடுப்பது தவறு என தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுத்த காசோலை எண் தெரியுமா என்றால் தெரியாது. காசோலை யார் பெயரில் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் காலியாக தான் இருந்தது, அதில் விஸ்வநாதன் கையெழுத்து மட்டும்

இருந்தது. எந்த தேதியில் காசோலை கொடுத்தேன் என கூற முடியாது என்றால் 2019ம் வருடம் 7வது மாதத்தில் கொடுத்தேன். யார் யார் சென்று கொடுத்தோம் என்றால் நான் சரவணன் மூலம் கொடுத்தேன். சரவணனை விசாரித்தால் தான் காசோலையை அவர் எடுத்து சென்று கொடுத்தாரா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். 2019ம் வருடம் 7வது மாதம் காசோலை கொடுத்ததற்கு சாட்சிகள் யாராவது உள்ளனரா என்றால் சாட்சிகள் இல்லை, சரவணன் மட்டும் உள்ளார். 2019ம் வருடம் 7வது மாதத்திலிருந்து தற்போது வரை காசோலையை நாகம்மாளுக்கு கொடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல அனுப்பியுள்ளோம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் அனுப்பினோமா இல்லையா என தெரியவரும் என்றால் சரிதான்.

எதிரி எந்த தேதியில் குற்றமுறையீட்டாளரிடம் கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான், அந்த தேதி 01.10.2020 என்றால் சரிதான். எதிரி செங்கல் சூளை எத்தனை நாளாக நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரிந்து 2 வருடமாக வைத்துள்ளார். ஜீன் 2021லிருந்து ஜீன் 2023 வரை எதிரி செங்கல் சூளை வைத்திருந்தாரா என்றால் இல்லை, 2019 ல் கொரோனா காலத்தில் இருந்த கற்களை விற்று விட்டு அதன் பிறகு அவர் செங்கல் சூளை நடத்தவில்லை. 22.04.2022ம் தேதி தான் நாகம்மாள் காசோலையை வங்கியில் செலுத்தினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இன்றைய தேதி வரை நான் வங்கிக்கு காசோலை கொடுத்த விசயமாக அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். தற்போது என் மகன் சொன்னதின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல, பணம் வாங்கியது நான், காசோலை அவருடையது. வழக்கானது 2022லிருந்து நடந்து வரும் விவரம் தெரியுமா என்றால் தெரியும். இன்றைய தேதி வரை நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான்.

இன்றைய தேதியில் இங்கு சாட்சியமளிக்க எதிரியின் வழக்கறிஞர் அழைத்து வந்தார் என்றால் சரியல்ல, நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்தது. சாட்சியமளிக்க எதிரியின் வழக்கறிஞர் தான் சொல்லிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. நாகம்மாள் எதிரி எந்த தேதியில் கடன் வாங்கினார் என சொல்லியுள்ளார் என்றோ, எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றோ,

எந்த தேதியில் காசோலையை வங்கியில் செலுத்தி திருப்பப்பட்டது என்றோ, வழக்கறிஞர் அறிவிப்பு பற்றியோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். அப்படியானால் நான் கூறியதின் அடிப்படையில் நாகம்மாளுக்கு ரூ.1,10,000/– ஐ நானே கொடுக்க வேண்டியுள்ளேன் என்றால் சரிதான். விஸ்வநாதன் கொடுத்த காசோலை பணம் வேறு, நான் கொடுத்த காசோலை பணம் வேறு என்றால் சரியல்ல. எந்த காசோலை நீதிமன்றத்தில் உள்ளது என தெரியாமல் நான் கொடுக்க வேண்டிய வேறு பாக்கிக்காக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் விஸ்வநாதனின் காசோலை சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எந்த காசோலையை பற்றி நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்பது பற்றி என்னிடம் ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் மகனுக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) தீர்த்தமலை

SRIPATHI K
Digitally signed by SRIPATHI K